இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 161 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 08 – செவ்வாய்க்கிழமை 21 ஜனவரி 2025 – கோவை ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 161 : Thiruvalluvar Year - 2056 - Thai 08 - Tuesday 21 January 2025 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## இன்றும் நாளையும் (21, 22) கள ஆய்வு:

# சிவகங்கையில் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

**சிவகங்கை, ஜன. 21 -**

**தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜன. 21, 22 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.**

**தமிழ் வளர்நூலகம், அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மற்றும் கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு மற்றும் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.**

முதல்வர் அவர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சி விவரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (ஜன.21 – செவ்வாய்க்கிழமை) காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தருகிறார்.

**லட்சுமி வளர் தமிழ் நூலகம்!**

திருச்சியில் இருந்து கார் மூலம் காரைக்குடி செல்லும் முதலமைச்சர் காலை 11:15 மணியளவில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் குடும்பத்தினரால் கட்டப்பட்டுள்ள திருமதி லட்சுமி வளர் தமிழ் நூலகத்தினை திறந்து வைத்து பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கிறார். இந்த வளர் தமிழ் நூலகத்தில் முழுவதுமாக தமிழ் நூல்கள், ஆராய்ச்சி வரலாற்று நூல்கள், பல்வேறு தமிழறிஞர்கள் எழுதிய நூல்கள் மற்றும் குறிப்புகள் வைக்கப்பட்டுள்ளன. இது தவிர நூலகத்தில் படிப்பதற்கான அறைகளும் அழகான முறையில் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நூலகம் குறித்த நோக்க உரையாற்றுகிறார். மேலும் கவிப்பேரரசு வைரமுத்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி, ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்திப் பேசுகிறார்கள். மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித்



முன்னிலை வகிக்கிறார். அதை தொடர்ந்து பல்கலைக்கழக முன்புறம் கட்டப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.

**கட்சிப் பணிகள் ஆலோசனை!**

தொடர்ந்து பகல் 12 மணி அளவில் அழகப்பா பல்கலைக்கழக கூட்ட அரங்கில் முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார். மாலை 5 மணி அளவில் காரைக்குடி பி.எல்.பி. பேலஸில் கழக நிர்வாகிகளை சந்தித்து கட்சி பணிகள் குறித்து ஆலோசனை நடத்துகிறார். அன்றிரவு காரைக்குடியில் தங்குகிறார்.

**நகரக் கழக வரவேற்பு!**

நாளை (ஜன. 22 - புதன்கிழமை) காலை 9 மணி அளவில் காரைக்குடியில் இருந்து கார்மூலமாக புறப்பட்டு குன்றக்குடி, திருப்பத்தூர் புறவழிச் சாலை, அரளிக்கோட்டை, ஒக்கூர், வழியாக சிவகங்கைக்குச் செல்கிறார். முதல்வர் அவர்களை குன்றக்குடி, திருப்பத்தூர் புறவழிச் சாலை, அரளிக்கோட்டை, ஒக்கூர் ஆகிய ஊர்களில் அந்தந்த பகுதி ஒன்றிய, பேருர் மாவட்டக் கழக நிர்வாகிகள் வரவேற்கிறார்கள். சிவகங்கை நகரில் நகரக் கழகத்தின் சார்பில் முதல்வர் அவர்களுக்கு வரவேற்பு தரப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை மன்னர் அரசு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் விழாவில் மாவட்ட அளவில் 50,000 நபர்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். அதனைத் தொடர்ந்து முடிவுற்ற திட்டங்களை துவங்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் விழா பேருரை ஆற்றுகிறார்.

முதல்வர் அவர்களை வரவேற்பதற்காக மாவட்ட எல்லையான நச்சாந்துபட்டியில் இருந்து திருப்பு வனம் புறவழிச்சாலை வரை இருபுறமும் சுமார் 100,கீ.மீட்டர் தூரம் வரை கழக வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் மேடை சிறப்பாக பிரம்மாண்டமான முறையில் பந்தல் சிவா மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ஆகியோர் முதல்வரின் வருகை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு விரிவான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆலோசனையின் பேரில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் முதல்வரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

---

## மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது!

# தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை குறித்து புரிதல் இல்லாமல் எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**விருதுநகர், ஜன. 21-**

**தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை குறித்து அடிப்படை புரிதல் இல்லாமல் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசி வருவதாக, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார். மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்றும் தங்கம் தென்னரசு குற்றம் சாட்டியுள்ளார்.**

விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணற்றில் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாடு அரசு முன்னெடுத்த முயற்சிகளால் தான் வணிக வரிகளின் சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. குறிப்பாக வளர்ச்சி என்பது 14 சதவிகிதமாக வந்திருப்பதற்கு நாம் எடுத்த முயற்சிகள் தான் காரணம். பொதுவாக நிதிநிலைமையை கட்டுக்குள் வைக்க Fund Tracking system செய்யப்பட்டு வருகிறது. ஒரு திட்டத்திற்கு எவ்வளவு நிதி எப்போது வெளியிட வேண்டும் என்ற அளவிற்கு நுட்பமாக நிதிமேலாண்மை செய்து வருவதால் , சிறப்பாகவே உள்ளது.

**மின்வாரியத்தின் நிதிநிலையை ஒன்றிய அரசு முற்றிலும் சீரழித்துவிட்டது!**

எவ்வளவு திட்டங்களுக்கு நிதி செலவழிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் கேட்கிறார். CMRL திட்டத்திற்கு அமித்ஷா அடிக்கல் நாட்டினார். பெயர் வைத்தார்களே தவிர சோறு வைக்க வில்லை. அந்த திட்டத்திற்காக எந்த நிதியும் வரவில்லை. பிறகு முதல்வர் பலமுறை தொடர்ச்சியாக வலியுறுத்திய பிறகு திட்டத்திற்கு நிதி ஒதுக்கினார்கள். நிதி ஒதுக்கப்படாத வரை, தமிழ்நாடு அரசு அதன் சொந்த நிதியில் இருந்து 26 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி திட்டத்தை செயல்படுத்தியது. ஒன்றிய அரசின் நிர்வாக குளறுபடியின் காரணமாக, மாநிலத்தின் மின்சாரதுறை வாரியத்தின் நிதி நிலைமையை ஒன்றிய அரசு முற்றிலுமாக சீரழித்துவிட்டதால் , தற்போது TANGEDCO நிறுவனத்திற்கு LOSS FUNDING மட்டுமே மாநில அரசின் நிதியில் இருந்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இயற்கை பேரிடர்களின் போது கொடுக்கப்பட்ட பணம் மாநில அரசின் நிதி. பேரிடர் பாதிப்பிற்காக ஒன்றிய அரசிடம் கேட்ட நிதி எதுவும் வரவில்லை. 776 கோடி ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது, ஆனால் அதுவும் மாநில அரசிற்கு வழக்கமாக கொடுக்கப்படும் பேரிடர் நிதி .



பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதியை மாநில அரசு தான் கொடுத்துள்ளது. சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு ஏறத்தாழ வரவேண்டிய 2000 ஆயிரம் கோடி ரூபாய் வரவில்லை. ஒன்றிய அரசு அதற்கான நிதியை விடுவிக்கவில்லை. அதேபோல், பிரதமமந்திரி வீடு கட்டும் திட்டத்தில் கூட, மாநில அரசு தான் அதிகமான நிதியை கொடுக்கின்றது. கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் மாநில அரசின் சொந்த நிதியில் இருந்து கூடுதல் தொகை கொடுக்கப்படுகிறது.

நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண், காலை உணவு, மகளிர் உரிமைத் தொகை என அனைத்து திட்டங்களுக்கும் மாநில அரசின் சொந்த நிதி தான் பயன்படுத்தப்படுகிறது. இந்த திட்டங்களுக்கான உரிய நிதியை, நமக்கு வரக்கூடிய வருவாய்களில் இருந்து திட்டமிடும் காரணத்தினால் தான், பட்ஜெட்டில் எந்த திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்குகிறோமோ, அது எல்லா துறைகளுக்கும் ஒதுக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை!**

நிதிமேலாண்மை தொடர்பாக, பொய்யான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சி தலைவர் பொது வெளியிலோ, சட்டமன்றத்திலோ சொல்வதை இனிமேலாவது தவிர்க்க வேண்டும்.

பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் பங்கீடு என்பது கொடுக்க வேண்டும். ஆனால் கொடுப்பது இல்லை. இந்த வருடம் ஜி.எஸ்.டி தொகை வந்திருக்கிறது. ஜி.எஸ்.டி நிதிப்பகிர்வை பொறுத்தவரை, பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களான உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் போன்று இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு மொத்த நிதிப்பகிர்வில் 40% அளவிற்கு வழங்கியுள்ளார்கள். குறிப்பாக உத்தரபிரதேசத்திற்கு மட்டும் 31 ஆயிரத்து 39 கோடி ரூபாய் நிதி சென்றுள்ளது. பீகாருக்கு 17 ஆயிரத்து 403 கோடி ரூபாயும், மத்தியபிரதேசத்திற்கு 13 ஆயிரத்து 582 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள். ஆனால் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு மொத்த நிதிப்பகிர்வில் 15% மட்டுமே கிடைத்துள்ளது. ஒட்டுமொத்தமாக மேற்கண்ட 4 மாநிலங்களுக்கும் சேர்த்து 27 ஆயிரத்து 310 கோடி ரூபாய் தான் வந்துள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டிற்கு மட்டும் வெறும் 7 ஆயிரத்து 56 கோடி ரூபாய் தான் ஒன்றிய அரசு கொடுத்துள்ளர்கள்.

தமிழ்நாடு அரசு பல்வேறு பேரிடர் பாதிப்பிற்காக 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய் ஒன்றிய அரசிடம் கேட்டிருந்தோம். ஏற்கனவே கூறியதுபடி 776 கோடி ரூபாய் மட்டும் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் கலைஞர் வீடு கட்டும் திட்டத்திற்கு 60 ஆயிரம் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது அதற்கான நிதியை 14 மடங்கு உயர்த்தி 3 லட்சத்து 50 ஆயிரம் கொடுக்கிறோம். அதுவே பிரதம மந்திரி வீடு கட்டும்திட்டத்தில் ஒரு வீட்டிற்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நிதி 1 லட்சத்து 20 ஆயிரம் மட்டுமே. அதையும் 8 வருடமாக ஒன்றிய அரசு உயர்த்தி தரவில்லை. இந்த திட்டத்தில், பயனாளிகளுக்கு 2 லட்சுத்து 82 ஆயிரம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் மாநில அரசின் பங்கு மட்டும் 1 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் கூட மாநில அரசு தான் 60% நிதியை கொடுக்கிறது.

கடும் நிதிச்சுமை இருந்தாலும் தமிழ்நாட்டில் தான் அதற்கென நிதி ஒதுக்கி இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வருகிறோம். மாற்றான்தாய் மனப்பான்மையில் இருக்கும் ஒன்றிய அரசால், தமிழ்நாட்டின் நிதி ஆதாரங்களில் பாதிப்பையும் நெருக்கடியையும் ஏற்படுத்துகிறது. இருப்பினும், முதல்வரின் வழிகாட்டுதலால் நிதி மேலாண்மை சிறப்பாகவே கையாளப்படுகிறது.

**ஒன்றிய அரசு தவறான தகவலை பரப்பக்கூடாது!**

தமிழ்நாட்டிற்கான உரிய நிதியை ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டும். அதைவிடுத்து தவறான தகவல்களை பரப்பக் கூடாது. மதுரை - தூத்துக்குடி புதிய அகல ரயில்பாதை திட்டம் குறித்து ஒரு தவறான தகவலை பரப்ப முயன்றார்கள். ஆனால் உண்மை நிலையை நாம் விளக்கியவுடன், செய்தியாளர்களால் தவறாக புரிந்துகொள்ளப்பட்டது என்ற விளக்கத்தை கொடுத்தார்கள்.

ஒரு மாநிலத்தில் இருக்கும் மக்கள் தொகை அடிப்படையில் நிதிப்பகிர்வினை அளிக்க வேண்டும், அந்த மாநிலங்களின் வளர்ச்சியை முடக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்படக் கூடாது என்பது தான் நம்முடைய கோரிக்கை. வளர்ந்த மாநிலங்களின் வளர்ச்சி நன்றாக இருந்தால் தான், உதவி தேவைப்படும் மாநிலங்களுக்கும் நிதியை கொடுக்க முடியும். மாநிலங்களுக்கான நிதிப்பகிர்வை வழங்குவதோடு, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியையும் உடனடியாக வழங்க வேண்டும்.

**பரந்தூர் விமான நிலையம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும்!**

பரந்தூரில் ஒரு புதிய விமான நிலையத்தை உருவாக்குவது என்பது அந்த பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். இந்தியாவின் மற்ற பெரிய நகரங்களான டெல்லி, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர் ஆகிய விமான நிலையங்களுடன் ஒப்பிடும் போது சென்னை விமான நிலையம் மிகச்சிறியதாக இருக்கிறது. டெல்லி விமான நிலையம் ஏறத்தாழ 51 ஆயிரம் ஏக்கரிலும், மும்பையில் 1150 ஏக்கர், ஹைதராபாத்தில் 5500 ஏக்கர், பெங்களூர் 4000 ஏக்கரிலும் விமான நிலையங்கள் அமைந்துள்ளது. ஆனால் சென்னை விமான நிலையம் 1000 ஏக்கரில் தான் அமைந்துள்ளது.

அளவில் சிறியதாக இருந்தாலும் வருடத்திற்கு 2 கோடி நபர்கள் சென்னை விமான நிலையத்தை பயன்படுத்துகிறார்கள். அடுத்த சில வருடங்களில் இது 3 கோடியை தாண்டும். அடுத்த 10 வருடங்களில் 8 கோடி பயனாளிகள் சென்னை விமான நிலையத்தை பயன்படுத்துவார்கள் என மதிப்பிடப்படுகிறது. சென்னையில் ஏற்கனவே குடியிருப்புகள் அதிகமாகிவிட்டதால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாத நிலை உள்ளது. எதிர்காலத்தையும் மனதில் வைத்தே கழக ஆட்சியில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதாரம், மாநிலத்தில் வளர்ச்சி என அனைத்து அந்த மாநிலங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை பொறுத்தே அமையும்.

‘டைடல் பார்க்’ போன்றவை எதிர்கால நோக்குடன் அமைக்கப்பட்டதால் தான் தகவல் தொழில்நுட்பத்தில் வளர முடிந்தது. அதுபோல தான் பரந்தூர் விமான நிலையமும். பொருளாதார புரட்சிக்கு அடிகோலாக பரந்தூர் விமான நிலையம் எதிர்காலத்தில் அமைந்திருக்கும். பயனிகளின் வசதி என்பதை தாண்டி, தொழில் வளர்சிக்கும் இந்த விமான நிலையம் தேவையானதாக இருக்கின்றது.

**மக்களின் குறைகளை அரசு ஆராயும்!**

ஒரு அரசியல் கட்சியின் தலைவர்கள் யார் வேண்டுமானாலும் பரந்தூர் மக்களைச் சென்று சந்திக்கலாம். அவர்களின் குறைகளை கேட்டு அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பட்சத்தில் நிச்சயம் அரசு அந்த மக்களின் குறைகளை ஆராயும்.

பரந்தூர் விமான நிலையம் நிச்சயம் தேவைப்படும் ஒன்றாக இருக்கும் காரணத்தினால் நிலங்களை கையகப்படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டுவருகிறது. அங்கு இருக்கும் மக்கள் பாதிக்காத வகையில் மறு குடிஅமர்வு செய்வதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. வளர்ச்சி ஒருபுறம் என்றால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் முதல்வர் கவனமாக இருக்கிறார். பரந்தூர் பகுதியின் நீர்நிலைகளையும் எந்த அளவிற்கு சீர் செய்ய முடியும் என்பதை ஆராய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளையும் அரசு கவனத்தில்கொள்ளும்.

**தமிழ்நாட்டில் நிதிநிலை கட்டுக்குள்தான் உள்ளது!**

ஒசூரில் விமான நிலையம் அமைக்கப்படுவதால் நம்முடைய தொழில் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் முன்னேறுவதுடன், பெங்களூர் நகரத்தின் போக்குவரத்து நெரிசலையும் குறைக்க உதவும். நம்முடைய அரசு விவேகமாக இருப்பதால் தான் இவ்வளவு நிதி நெருக்கடியிலும் கடனை கட்டுக்குள் வைத்திருக்கிறோம். நிதிக்குழு பரிந்துரைத்த கடன் அளவை விட குறைவாக தான் தமிழ்நாடு அரசு கடன் வாங்குகிறது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.